# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1169 - 2001 ජනවාරි 26 වැනි සිකුරාදා - 2001.01.26

*1169 ஆம் இலக்கம் - 2001 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 32 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 43 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 34 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் (திருத்தம்) சட்டமூலமும், தேயிலை ஆராய்ச்சிச் சபை (திருத்தம்) சட்ட மூலமும், தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலமும், இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தம்) சட்டமூலமும், 2000 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான "அறிவித்தல்" களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2001, பெப்புருவரி 02 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2001, சனவரி 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

நெவில் நாணயக்கார,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2001 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

## மத்திய மாகாண சபை

சிபிசி /ஏஎஸ் /ஈ/1/2000

### மத்திய மாகாணத்தின் பாதைகள் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் திட்டமிடப்பட்ட சட்டமூலம்

மத்திய மாகாண சபையினால் 2000. ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி கௌரவ சபையில் முன்வைக்கப்பட்ட 2000 இல. 01 ஐக் கொண்ட மத்திய மாகாணத்தின் பாதைகள். பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் திட்டமிடப்பட்ட சட்டமூலம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதுடன், அதற்கு கௌரவ ஆளுநர் அவர்களது அனுமதி 2000.12.20 ஆந் திகதி கிடைத்துள்ளது என்பதையும் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

டப்ளியூ. சகலசூரிய,
சபைச் செயலாளர்,
மத்திய மாகாண சபை.

சபை செயலகம்,
மத்திய மாகாண சபை,
த. பெ. இல. 07,
பள்ளேகலை,
குண்டசாலை,
2000.12.27.

### மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை நியதிச்சட்டம்

முன்னுரை.

மத்திய மாகாணத்துக்குள்ளாக பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் மத்திய மாகாணத்துக்கு உரித்தான அளவிற்கு ஏற்ப மத்திய மாகாணத்துடன் தொடர்புடைய உள்ளக மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகளையும்

ஒழுங்குபடுத்துவதற்கும் அவ்விடயங்களுடன் இடைநேர் விளைவான ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் அவ்வொழுங்குபடுத்தல் நோக்கத்தை கருத்திற்கொண்டு, மத்திய மாகாணத்திற்கு "பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை" எனும் பெயரில் அதிகார சபையொன்றை தாபிப்பதற்கும் அத்தகைய அதிகார சபை மூலம் 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டத்தையும் அத்தகைய திருத்தச் சட்டத்தையும், அந்நியதிச் சட்டத்தின் படி இடப்படும் கட்டளைகளையும் நிறைவேற்றுதல் அதிகார வலுபடுத்துதல் /அல்லது தகுந்தவாறு திருத்தஞ் செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய நியதிச் சட்டம் இதுவாகும்.

மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு சட்டமாக்கப்படுவதாகுக

1. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க "பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை நியதிச் சட்டம்" எனும் பெயரில் அழைக்கப்படுகின்றது. சுருக்கப் பெயர்.

2. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் நிச்சயிக்கப்படும் (இங்கு இதற்குப் பிற்பாடு உரிய திகதி எனக் குறிப்பிடப்படும்) திகதியிலிருந்து இந்த நியதிச் சட்டம் அமுலுக்கு வரும். அமுலுக்கு வரும் திகதி.

## பகுதி 1

### *மத்திய மாகாணம் தொடர்பாக பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையொன்றை தாபித்தல்*

3. இந்த நியதிச் சட்டத்தில் இதன் பிற்பாடு 'அதிகார சபை' எனும் பெயரில் குறிப்பிடப்படும் மத்திய மாகாணத்தின் பயணிகள்போக்குவரத்து சேவைகள் 'அதிகார சபை' எனும் பெயரில் அழைக்கப்படும் அதிகார சபையொன்று இந்த நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்படுகின்றது. அமைச்சரினால் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படும் தினத்திலிருந்து அத்தகைய அதிகார சபை அமுலுக்கு வரும். அதிகார சபை.

4. மூன்றாவது பிரிவில் பெயர் குறித்து வெளியிடப்படும் அதிகார சபை இடையறாத வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் உடையதுமான ஓர் கூட்டுத்தாபனமாகத் திகழல் வேண்டும். அத்துடன் அதன் பெயரில் வழக்கு தொடரவும் அதற்கு எதிராக வழக்குத் தொடரவும் முடியும்.

5. அதிகார சபை தனது சொந்த அபிப்பிராயப்படி அமைச்சரின் அனுமதியுடன் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு உரிய விடயத்துடன் தொடர்புடைய செயல்கள் மற்றும் அதிகாரங்களை பாரித்தல், பன்முகப்படுத்தல், அதிகார சபையின் உதவிக் காரியாலயங்களை தகுந்த இடங்களில் அமைத்து நடைமுறைப்படுத்துதல் போன்ற விடயங்களை செயல்படுத்தலாம். உதவி அலுவல கங் கள்.

6. (அ) அதிகார சபை, பணிப்பாளர் சபையுடன் அடங்கலாக பதினொரு அங்கத்தவர்களை உடையதாயிருத்தல் வேண்டும். அத்துடன் அவர்களில் ஐந்து பேர் 'உத்தியோக வலுவுடைய அங்கத்தவர்களாகவும் ஆறு பேர் நியமன அங்கத்தவர்களாகவும்' இருத்தல் வேண்டும். அதிகார சபை அங்கத்தவர்களும் பணிப்பாளர் சபையும்.

(ஆ) அதிகார சபையின் அனைத்து அங்கத்தவர்களும் அமைச்சரின் கையொப்பத்துடன் வழங்கப்படும் கடித மூலம் முறையாக நியமிக்கப்படல் வேண்டும். அத்தகைய எல்லா நியமனங்களும் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும்.

(இ) உத்தியோக வலுவினால் நியமிக்கப்படும் அதிகார சபையின் அங்கத்தவர்கள் கீழ்வரும் ஆட்களாக இருத்தல் வேண்டும். உத்தியோ வலுவுடைய அங்கத்தவர்கள்.

(1) பயணிகள் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளர் அல்லது தான் தகுதியானதெனக் கருதுவதாயின் அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை தனக்குப் பதிலாக செயலாளரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படலாம்.

(2) பயணிகள் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான மாகாண அமைச்சில் சேவையிலுள்ள உதவிச் செயலாளரினால் பதவி நிலைக்கு குறையாத பதவி தரமுடைய அமைச்சரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர்.

(3) நிதி விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் அவரின் அமைச்சின் கணக்காளர் ஒருவர்.

(4) மத்திய மாகாண பொறுப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அல்லது அவரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், அல்லது அதிலும் கூடிய உயர் தரமுடைய உத்தியோகத்தர் ஒருவர்,

(5) மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஒருவர்.

நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள்.

(உ) அதிகார சபையின் நியமன அங்கத்தவர்கள் கீழ் வரும் ஆட்களாக இருத்தல் வேண்டும்:-

1. போக்குவரத்து, பொருளாதாரம், நிருவாகம், எந்திரவியல் ஆகிய துறைகளில் ஏதாவது ஒரு துறையில் அல்லது பல துறைகளில் பரந்த அனுபவம், தகுதி அல்லது திறனும் உள்ளவர் என அமைச்சர் திருப்தி கொள்ளும் மூன்று நபர்கள்.

2. மத்திய மாகாணத்தின் பயணிகளை பிரதி நிதித்துவம் செய்வதற்கு அமைச்சரின் அபிப்பிராயப்படி தெரிவு செய்யப்படும் ஆள் ஒருவர்.

3. மத்திய மாகாணத்தின் தனியார் வசு வண்டி உரிமையாளர்களை பிரதி நிதித்துவம் செய்வதற்கு மத்திய மாகாணத்திற்குரிய வசு வண்டி சொந்தக்காரர்களின் சங்கத்தினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் ஒருவர்.

4. அமைச்சரின் அபிப்பிராயத்தின்படி தீர்மானிக்கப்படும் கீழ் வரும் உத்தியோகத்தர்களில் ஒருவர்.

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபை தவிசாளரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் பிரதேச முகாமையாளரின் பதவி நிலைக்கு குறையாத பதவித் தரம் உடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது,

(ii) இலங்கை போக்குவரத்து சபைக்குப் பதிலாக பதிலாள் எனும் வகையில் தேசிய மட்ட அல்லது பிரதேச மட்டத்திலான ஏற்பாட்டுக் குழுவொன்றின் தலைவர் அல்லது பிரதேசத் தலைவரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் மேல் (அ) (i) வது உப பிரிவில் குறித்துக் காட்டப்படும் உத்தியோகத்தர் தரத்துக்கு குறையாத தரமுடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது,

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளரினால் பெயர் குறித்து குறிப்பிடப்படும் உதவி பணிப்பாளரின் பதவி தரத்திற்கு குறையாத தரமுடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்.

அதிகாரசபையின் தவிசாளர்.

7. (அ) அமைச்சரினால் அதிகார சபையின் அங்கத்தவர்களில் ஒருவரை அதிகார சபையின் தவிசாளராக நியமிக்கப்படல் வேண்டும்.

அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம்.

(ஆ) அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம் தவிசாளருக்கு கையளிக்கப்படுகின்றது. அத்தகைய அதிகாரத்தை அதிகார சபையின் ஒப்புமையுடன் அதிகார சபையின் உத்தியோக வலுவுடைய அங்கத்தவர் ஒருவருக்கு/ அல்லது 26 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் பொது முகாமையாளராகிய அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கும் அவரின் மூலம் அதிகார சபையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பாரிக்கப்படலாம்.

அவசர நிலைமை தத்துவங்கள்.

(இ) பாரிக்கப்பட்டுள்ள ஏதாவது நிறைவேற்று அதிகாரம் அவசர நிலைமைகளின்போது தவிசாளரினால் பிரயோகிப்பதற்கு தடைகள் ஏதும் அவருக்கு இருத்தல் ஆகாது.

அங்கத்தவர் ஒருவரா வதற்கு பொருந்தாத் தகைமைகள்.

8. ஒரு நபர் பாராளுமன்ற உறுப்பினராக, அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது ஏதாவதொரு உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினராக இருப்பது அல்லது உறுப்பினராக நியமனம் பெறுவது அத்தகைய நபர் அதிகார சபையின் அங்கத்தவராக நியமனம் பெறுவதற்கு அல்லது அத்தகைய அங்கத்தவராக கடமை புரிவதற்கு தகைமையற்றவராவர்.

அமைச்சருக்கு தகவல் வழங்குதல்.

9. ஒரு நபர் அதிகார சபையின் அங்கத்தவராக நியமிப்பதற்கு முன்பு அவர் அத்தகைய அதிகார சபையின் அங்கத்தவராக அவரின் கடமைகளை மேற்கொள்வதற்கு நேர் எதிராக பாதிப்பு செலுத்தும் வகையில் நிதி, அல்லது வேறுவகையில் அரசாங்க அல்லது ஏதாவதோர் மாகாண சபை அல்லது உள்ளூராட்சி அதிகார சபையில் தொடர்பு வைத்திருக்கவில்லை அல்லது தொடர்பு கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளவில்லை என அமைச்சரானவர் திருப்தியடைதல் வேண்டும். அவ்வாறே, எந்தவோர் அங்கத்தவரும் அவ்வாறான தொடர்பு கொள்ள முயற்சிகளோ இருக்கவில்லை, என அமைச்சர் காலத்திற்கு காலம் திருப்தியடைதல் வேண்டும். அமைச்சரினால் அங்கத்தவராக நியமிக்கப்பட்ட ஒருவர் அல்லது அவ்வாறு அங்கத்தவராக நியமிப்பதற்கு அமைச்சர் கருதும் ஒருவர் இந்த பிரிவின் கீழ் தனது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியம் என அமைச்சர் கருதும் தகவல்களை அமைச்சருக்கு வழங்குதல் வேண்டும்.

அதிகாரசபையின் ஒப்பந்தங்கள்.

10. அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் அல்லது நடை முறைப்படுத்தப்படுவதற்கு கருதும் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, எவ்வித தொடர்பும் வைத்திருக்கும் அதிகாரம் சபையின் எந்தவொரு அங்கத்தவரும் அத்தகைய தொடர்பு பற்றி அதிகார சபையினால் நடாத்தப்படும் ஆகக்கிட்டிய கூட்டமொன்றில் அதுபற்றி வெளிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட விபரங்கள் கூட்ட அறிக்கையில் அறிக்கையிடப்படல் வேண்டும், மேலும் அவ்வாறு தொடர்பு வைத்திருக்கும் அங்கத்தவர், அந்த ஒப்பந்தம் பற்றிய எவ்வித கலந்துரையாடலின்போதோ தீர்மானம் எடுக்கும்போதோ கலந்து கொள்ளல் ஆகாது.

11. இங்கு 12வது ஏற்பாடுகளின் பிரகாரம், மாகாண போக்குவரத்து அதிகார சபையிலுள்ள ஒவ்வோர் நியமன அங்கத்தவரினதும் பதவி காலம் நியமன திகதியிலிருந்து மூன்று வருட காலமாயிருத்தல் வேண்டும். என்பதுடன், காலம் முடிந்தவுடன் பதவி வெறிதாக்கும் அங்கத்தவரை மீண்டும் நியமனஞ் செய்வதற்கு அவர் தகுதி உடையவராயிருத்தல் வேண்டும். *அதிகார சபை அங்கத்தவர்களின் பதவிக் காலம்.*

இருப்பினும் அதிகார சபையில் நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவரின் வெற்றிடத்திற்கு நியமனஞ் செய்யப்படும் அங்கத்தவர் அவர் காலத்திற்கு முன்பே பதவியிலிருந்து கேட்டு விலகிக் கொண்டால், அல்லது நீக்கப்பட்டால் அல்லது வேறு விதமாக பதவி வெற்றிடமாக்கப்பட்டாலொழிய அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்வருகிறாரோ, அவ்வுறுப்பினரின் பதவி காலத்தில் எஞ்சிய காலத்திற்கு மாத்திரம் பதவி வகித்தல் வேண்டும்.

12. (i) மேலே 6 (இ)(1), (2) அல்லது (3) ஆகிய உப பிரிவுகளின் கீழ் நியமனஞ் செய்யப்பட்ட அங்கத்தவவொருவரை அமைச்சரினால் அவரின் அபிப்பிராயப்படி வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படும் ஓர் உத்தரவு பிரகாரம் அகற்றப்படலாம். *அமைச்சரினால் அங்கத்தவர் ஒருவரை அவரின் பதவியிலிருந்து விலக்குதல்.*

(ii) அமைச்சரின் 12 (1) ஆம் உப பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட உத்தரவு மாகாண அதிகார சபையின் ஓர் நியமன அங்கத்தவர் சம்பந்தமாயின் அத்தகைய உத்தரவு வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் அத்தகைய அங்கத்தவர் தனது பதவியிலிருந்து அகலல் வேண்டும்.

13. அதிகார சபையின் நியமன அங்கத்தவர் ஒருவர் அல்லது அதிகார சபையின் தவிசாளர் அவரவர் மூலம் அமைச்சருக்கு அனுப்பும் கடிதம் மூலம் தத்தமது பதவியிலிருந்து கேட்டு விலகிக் கொள்ளலாம். *அங்கத்தவர்கள் கேட்டு விலகல்.*

14. அதிகார சபையின் தவிசாளர் அல்லது அங்கத்தவர் ஒருவர் இலங்கையினின்றும் வெளியில் இருத்தல் அல்லது வேறு ஏதாவது ஒரு காரணமாக தற்காலிகமாக தமது பதவியின் கடமைகளை மேற்கொள்ள முடியாதிருக்கும் சந்தர்ப்பங்களில் இங்கு 6வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு கவனத்தை செலுத்தி அவருக்கு பதிலாக கடமைகளை மேற்கொள்வதற்கு வேறொரு ஆளை நியமிப்பதற்கு அமைச்சருக்கு முடியுமாயிருக்கும். *அங்கத்தவர்கள் ஒருவர் இல்லா திருத்தல்.*

15. போக்குவரத்து அதிகார சபையின் தவிசாளருக்கும் அங்கத்தவர்களுக்கும் அமைச்சரினால் மத்திய மாகாண நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புமையுடன் *நியமன அங்கத்து வர்களுக்கான பணிக்கொடைகள்.*

நிச்சயிக்கப்படும் பணிக்கொடை, படிகள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் அதிகார சபையின் நிதியத்தின் மூலம் செலுத்தப்படலாம்.

16 (1) அதிகார சபையின் கூட்ட அமர்வுகளில் தவிசாளர் பங்கு பற்றும் அனைத்து அமர்வுகளுக்கும் அவரே தலைமை வகித்தல் வேண்டும். அதிகார சபையின் கூட்டமர்வுகளில் ஏதாவது ஒரு கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காவிடின், அவ்வமர்வின் தலைமைத்துவத்திற்கு அவ்வமர்வுக்கு சமுகந்தந்திருக்கும் ஏனைய அங்கத்தவர்களில் ஒருவரை பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்தல் வேண்டும். *கூட்ட அமர்வுகளில். தலைமை வகித்தல்.*

(2) அதிகார சபையின் கூட்டமொன்றிற்கான நடப்பெண், தவிசாளர் உட்பட மொத்த அங்கத்தவர்களில் அங்கத்துவ வெற்றிடங்களை தவிர்த்து எஞ்சிய தொகையில் அரைப்பங்கிற்கு அதிகமான அங்கத்தவர்களை கொண்டிருத்தல் வேண்டும். *கூட்ட நடப்பெண்.*

(3) அதிகார சபையின் எந்தவோர் கூட்டத்திற்கும் தலைமை வகிக்கும் அவருக்கு அவரின் வாக்கிற்கு மேலதிகமாக தீர்ப்பு வாக்கொன்றிருத்தல் வேண்டும். *தீர்ப்பு வாக்கு.*

(4) அதிகார சபை கூட வேண்டிய அமர்வுகளின் எண்ணிக்கை மற்றும் கூட்டத்தை நடாத்துதல், அதிகார சபைக்கு அல்லது தவிசாளருக்கு இந்த நியதிச் சட்டத்தின் கீழ் முன் வைக்கப்படும் அப்பீல் மனுக்களை கவனத்திற் கொள்ளல் உட்பட கூட்ட அமர்வுகளின் கடமைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை விதிமுறைகள் ஆகியன தொடர்பாக அதிகார சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படலாம். ஏதாவதொரு சாதாரண விடயத்துக்காக அமைச்சரினால் கூட்டத்தை கூட்டுமாறு அறிவித்தல் கொடுக்கப்பட்டால், அதிகார சபை கூடுதல் வேண்டும். *கூட்ட அமர்வுகளின் எண்ணிக்கையும் நடவடிக்கை விதி முறைகளும்.*

17. அதிகார சபையின் அங்கத்துவ வெற்றிடம் ஒன்று இருப்பினும் அதிகார சபை செயற்படலாம், அத்துடன் அத்தகைய வெற்றிடம் அல்லது அங்கத்தவர் ஒருவரை நியமனஞ் செய்ததில் ஏற்பட்ட குறைபாடொன்று இருத்தல்- *வெற்றிடம் ஒன்று இருப் பினும் அதிகார சபை செயற்படலாம் என்பது.*

எனும் காரணமாக மாத்திரம் அதிகார சபையின் செயல் முறை அல்லது தீர்மானம் ஒன்று செயல் இழத்தல் வலுவற்றுப்போதல் ஆகாது.

18 (1) அதிகார சபையின் அமுத்தம் சபையின் தவிசாளரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும். *அதிகார சபை யின் அமுத்தம்.*

(2) அதிகார சபையின் அமுத்தத்தை அதிகார சபை முடிவு எடுக்கும் விதத்தில் மாற்றம் செய்து கொள்ளலாம்.

(3) அதிகார சபையின் அழுத்தம், அந்த அதிகார சபையின் இரு அங்கத்தவர்களின் முன்னிலையிலன்றி எழுத்தாவணம் ஒன்றிற்கு அல்லது நிருபம் ஒன்றிற்கு இடப்படல் ஆகாது, அத்துடன் அவ்விரு அங்கத்தவர்களும் மேற்படி சமூகமளித்திருந்தார்கள் என சாட்சி பகரும் வகையில் அவ்வெழுத்தாவணத்திலோ, நிருபத்திலோ கையொப்பம் இடல் வேண்டும்.

## பகுதி II

### *அதிகார சபைக்குரிய அதிகாரங்கள், கடமைகளும் பொறுப்புக்களும் மற்றும் பணியாளர்கள்*

அதிகாரங்களும் கடமைகளும பொறுப்பு களும்.

19. மாகாண அதிகார சபைக்கு கீழ் வரும் அதிகாரங்களும் கடமைகளும் கையளிக்கப்படுகின்றது.

தரப்படுத்தல்களை விபரித்தல்.

(அ) மத்திய மாகாணத்திற்குள்ளாக மத்திய மாகாணத்துடன் தொடர்புடைய பயணிகள் போக்குவரத்து தேவைகளை நிறைவு செய்யுமுகமாக போதியளவானதும், ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான நல்ல தரத்துடன் கூடிய வசுவண்டி போக்குவரத்து சேவையொன்று நடைமுறையிலுள்ளதா? என்பது பற்றி அவதானத்துடன் இருப்பதும், அவற்றை கணிப்பீடு செய்வதும் அத்தகைய சேவைகள் தொடர்பான தரப்படுத்தல்களை நியமப்படுத்தலும்.

நேர அட்ட வணை.

(ஆ) மத்திய மாகாணத்துக்குள்ளாக பயணிகள் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக வசு வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு நேர அட்டவணைகளை 'நிச்சயித்தல்' அத்தகைய நேர அட்டவணைப்படி ஓட்டங்களை மேற்கொளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என போக்குவரத்தாளர்களுக்கு கட்டளையிடல், அவர்கள் நேர அட்டவணைக்கு ஏற்ப ஓட்டங்கள் மேற்கொள்கின்றார்களா என்பதை கணிப்பிடலும் அல்லது கணிப்பீடு செய்தலும்.

[illegible] சேவை [illegible]ப்பத்திரங் [illegible] ஒழுங்கு [illegible].

(இ) மத்திய மாகாணத்துக்குள்ளாக பயணிகள் போக்குவரத்து விடயமான வசுவண்டியொன்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகாரம் வழங்கும் அனுமதி சீட்டொன்றை ஒரு நபருக்கு வழங்குதல் அல்லது அது போன்ற வேறோர் அதிகாரத்தை வழங்குதல், புதுப்பித்தல் திருத்துதல், செல்லுபடியற்றதாக்குதல் ஆகியன தொடர்பாக ஒழுங்கு விதிகளை விதித்தல்.

(ஈ) 3 வது உப பிரிவில் மேற்குறிப்பிடப்பட்ட அனுமதிச் சீட்டுக்கள்

நிபந்தனைகள்.

அல்லது வேறு அதிகாரங்கள் தொடர்பான நிபந்தனைகளை விதித்தல், அனுமதிச் சீட்டுக்களை பெறுநர்கள் அல்லது அவர்களது ஊழியர்கள் அத்தகைய நிபந்தனைகளை கடைப்பிடிக்கின்றனரா என கண்காணித்தல் மற்றும் வேறொரு எழுத்து மூல சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் மேற்படி நிபந்தனைகளை கடைப்பிடிக்கச் செய்தல்.

தகவல்களை வழங்குதல்.

(உ) இந்த நியதிச் சட்டத்தின் ஏதாவதொரு நோக்கத்துக்காக தேவைப்படும் தகவல்களும் அறிக்கைகளும் அதிகார சபைக்கு வழங்குமாறு இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூல சட்டத்தின் பிரகாரம் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிச் சீட்டு உரிமையாளருக்கு அல்லது வேறு நபருக்கு கட்டளை இடல்.

கட்டணங்கள்.

(ஊ) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயணிகள் சேவை அனுமதிச் சீட்டுடன் தொடர்புடைய வழங்கல்கள், புதுப்பித்தல்கள், திருத்தங்கள் செய்தல் மற்றும் தொடர்புடைய பிற விடயங்களுக்காக அறவிடப்படற்பாலதான கட்டணங்கள் நியமதித்தல், காலத்திற்கு காலம் திருத்தங்களை மேற்கொள்ளல்.

பயணமுடிவு வரை காட்சிக்கான பெயர்ப்பலகை, ஆகியன,

(எ) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வழங்கப்படும் பயணிகள் சேவை அனுமதிச் சீட்டின் அதிகார வலுவின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வசுவண்டியொன்றின் பிரயாண முடிவு வரை காட்சிக்காக வைக்கப்பட வேண்டிய பெயர்ப்பலகை, குறிப்புக்கள், குறிபீடுகள், பற்றிய ஒழுங்கு விதிகளை விதித்தல்.

வசு வண்டி யின் எழுத்தா வணங்கள்.

(ஏ) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிச் சீட்டின் அதிகார வலுவின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வசு வண்டிகளில் சாரதிகள் அல்லது நடத்துனர்கள் அல்லது இருவரும் தாம் கொண்டு செல்ல வேண்டிய கைவசம் வைத்திருக்க வேண்டிய எழுத்தாவணங்களும் அவற்றில் குறிப்பிடவேண்டிய தகவல்களையும் நியமித்தல்.

வசு வண்டியின் தகுதி.

(ஐ) இங்கு நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிச் சீட்டொன்றின் அதிகார வலுவின்கீழ் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபத்தப்படும் வசு வண்டியொன்றில் அனுமதிச் சீட்டு உரிமையாளரினால் பேணப்பட வேண்டிய குண நலன்கள் தகுதிகள் பற்றிய தரங்கள் தொடர்பான நிபந்தனைகள் விதித்தல், அந் நிபந்தனைகளை மீறல் அல்லது கவனத்திற் கொள்ளா திருத்தல் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நிர்ணயித்தலும்.

அறிக்கைகள்.

(ஒ) இங்கு நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயணிகள்

சேவை அனுமதிச் சீட்டொன்றின் அதிகார வலுவின்கீழ் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபத்தப்படும் வசுவண்டியொன்றின் ஓட்ட வார எண்ணிக்கை தொடர்பாக பேணிவர வேண்டிய அல்லது நடைமுறைப்படுத்த வேண்டிய அறிக்கைகளை நிர்ணயித்தல்.

(ஓ) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயணிகள் சேவை அனுமதிச் சீட்டொன்றினை வைத்திருப்பவரினால் அத்தகைய அனுமதிச் சீட்டின் அதிகார வலுவின் கீழ் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் வசுவண்டியொன்றின் சாரதியாகவும், நடாத்துனராகவும், சேவையில் ஈடுபடுத்தும் ஆட்கள் தொடர்பாகவும் அவர்களின் சேவையை ஆரம்பிக்கும் முடிவுறுத்தும் நேரங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கும் ஓய்வு நேரங்கள் தொடர்பாகவும் படிகள், கொடுப்பனவுகள் அல்லது கட்டணங்கள் தொடர்பாகவும் பேணி வர வேண்டிய நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அல்லது அதிகார சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிக்கைகளை நிர்ணயித்தல்,

*வசுவண்டி நிறுத்தும் இடங்கள் மற்றும் வீதித் தரிப்பிடங்கள்.*

(ஔ) மத்திய மாகாணத்துக்குள்ளாக காணப்படும் அனைத்து வசுண்டி நிறுத்தும் நிலையங்களையும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் ஆகியன மத்திய மாகாண போக்குவரத்து அதிகாரசபைக்கு உரித்தானவையாகும். போக்குவரத்து அமைச்சின் சட்ட ரீதியாக அனுமதி பெறாது எத்தகைய நிர்மாணங்களையும் செய்ய முடியாது. அத்தகைய வசு வண்டி நிறுத்தும் நிலையங்களின் பெயர் பட்டியல் அட்டவணை 1 எனும் வகையில் இந்த நியதிச் சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்திற்குள்ளாக வசுவண்டி நிறுத்தும் நிலையங்கள் மற்றும் வீதித் தரிப்பிடங்கள் அமைத்தல், பராமதித்தல், அபிவிருத்தி செய்தல், மாற்றங்களைச் செய்தல் மற்றும் மூடிவிடல், அவற்றின் பயணிகள் பாதுகாப்பு ஆவணங்கள் மற்றும் வேறு கட்டிடங்கள் அமைத்தல் அத்தகைய இடங்களுக்கு பாதுகாப்பு அளித்தல் வசுவண்டி நிறுத்தும் நிலையங்களின் இடப்பரப்பில் எல்லைப் பகுதிகளில் உள்ள வெற்றிடங்களை பயனுள்ளவாறு பிரயோகத்திற்கு எடுத்தல், பஸ் நிறுத்தும் நிலையங்களுக்கு தேவைப்படும் உசாத்துணை சேவைகளை வழங்குதல், அவற்றிற்கு இடைநேர் விளைவான விடயங்களுக்கு தொடர்புடைய நிபந்தனைகளை விதித்தல், அனுமதி வழங்குதல், கட்டுப்படுத்தல், தடைகளை விதித்தல் பற்றிய தீர்மானங்களை எடுத்தல்.

*வசுவண்டி நிறுத்தும் முகாமைத்துவ நிலையங்களின் நடைமுறைகள்.*

(க) வசுவண்டி நிறுத்தும் நிலையங்களில் முகாமைத்துவ விடயம் நேர அட்டவணைகளை நடைமுறைப்படுத்தல் வசுவண்டிப் பிரயாணங்களை ஆரம்பிக்கும் இடங்களை நிர்ணயித்தல் அத்தகைய விடயங்களுக்கென வசு வண்டி நிறுத்தும் நிலையப்பொறுப்பு உத்தியோகத்தர்கள், நேர அட்டவணையாளர்கள் மற்றும் தேவைப்படும் ஏனைய பணியாளர்கள் போன்றோரை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அவர்களின் தத்துவங்கள் விடயங்கள் பொறுப்புக்கள் என்பவற்றை விதித்தல் ஆகிய கட்டளைகளை பிறப்பித்தல்,

(கா) வசு வண்டிகள் நிறுத்தும் நிலையங்களில் ஒட்ட முகாமைத்துவ விடயங்களுக்கு பொறுப்பான பணியாளர்களினால் நடைமுறைப்படுத்த வேண்டிய அறிக்கைகளையும் எழுத்தாவணங்களையும் அவற்றில் குறிக்க வேண்டிய தகவல்களையும் நிச்சயித்ததும் அவற்றின் பாதுகாப்பு தொடர்பாக கட்டளை பிறப்பித்தலும்.

*சட்டத்திற்கு எதிரான பயணிப் போக்குவரத்துக்கள்*

(கி) மத்திய மாகாண வரையறைக்குள் பயணிகள் போக்குவரத்துடன் தொடர்புடைய சட்டவிரோத நடவடிக்கைகளை தேடுதல், தடுத்தல், அவற்றிற்கு எதிராக செயற்படல் போன்ற நோக்கங்களுக்காக திடீர் பரிசோதனைக் குழுக்களைத் தாபித்தல் அல்லது தாபிக்கச் செய்தல், மற்றும் அக்குழுக்களுக்கான தத்துவங்கள், கடமைகளை நிர்ணயித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகளை விதித்தல்.

*உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் (கொந்தராத்துக்கள்).*

(கீ) அதிகார சபையின் நோக்கங்களையும் கடமைப் பொறுப்புக்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கும், தத்துவங்களை நிறைவேற்றுவதற்கும் தேவைப்படும் ஒழுங்கு விதிகளை விதித்தலும், அத்தகைய குறிக்கோளை அடையுமுகமாக இலங்கைக்குள்ளாக அல்லது இலங்கைக்கு வெளியே ஆளொருவருடன் அல்லது நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கைகளுக்கு அல்லது கொந்தராத்துகளுக்கு உடன்படல் .

*சொத்துக்களை எடுத்தல்.*

(கு) ஏதாவதொரு அசையும் அல்லது அசையா சொத்தை பிரயோகித்தல், நிச்சயிக்கப்பட்ட ஓர் எடுத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல், பொறுப்பில் வைத்திருத்தல் பிரயோகித்தல், நிச்சயிக்கப்பட்ட ஓர் செயற்பாட்டிற்கு எற்ப வெளியேற்றல்,

*சேவைக் கட்டணங்கள்.*

(கூ) அதிகார சபையினால் வழங்கப்படும் ஏதாவது ஒரு சேவை, வசதி அல்லது ஆதனம் தொடர்பாக கட்டணம் அறவிடல்

*அர்ப்பணங்கள்.*

(கெ) நிதி வகையிலோ பொருள் வகையிலோ கிடைக்கும் மானியங்கள், அர்ப்பணங்கள், உதவித் தொகைகள், விருதுகள், என்பவற்றை ஏற்றுக் கொள்ளுதலும், அவற்றை அதிகாரசபையின் நோக்கங்களுக்காக பிரயோகத்திற்கு எடுத்தலும்,

*ஒழுங்கு விதிகள் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும்.*

20. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது விடயம் சம்பந்தமாக அதிகார சபையினால் இயற்றப்படும் ஏதாவது ஒழுங்கு விதி அமைச்சரின் அனுமதியின் பின்பு நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒழுங்கு விதியை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும், மேலும் அந்த ஒழுங்கு விதி வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து 45 நாட்களுக்குள் மாகாண சபையின் கவனத்திற்கு அமைச்சரினால் முன் வைக்கப்படலும் வேண்டும்.

*பணியாளர்கள் தொடர்பான அதிகாரங்கள் .*

21. அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட வகையில் அதிகாரசபையின் கடமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படும் பணியாளர் குழாமை தீர்மானிப்பதற்கும் இப்பணியாளர் குழாமுக்கு தொடர்புடையதாக பின்வரும் விடயங்களை அதிகார சபை மேற்கொள்வதற்கும் அதிகாரம் உண்டு.

(1) கல்வி, தொழில் மற்றும் வேறு தகைமைகள், வேதனங்கள், மற்றும் சம்பள அளவுகள் ஆகியன அடங்கும் வகையில் ஆட்சேர்ப்பு விதிமுறைகளை விதித்தல்,

(2) நியமனம் வழங்கல், பதவி உயர்வுகள் வழங்கல், சம்பளங்கள், வேதனங்கள், ஏனைய படிகள், ஒழுக்காற்று தண்டனைகள், சேவையை முடிவுறுத்தல் உட்பட ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் சாதாரண பழக்கவழக்கங்கள், விடுமுறைகள் ஆகிய பணியாளர்களின் நிருவாகத்துடன் தொடர்புடைய கட்டளைகளை பிறப்பித்தல். (அரசாங்க சேவையில் இருந்து அல்லது மாகாண அரச சேவையில் இருந்து இரண்டாம் நியமன அடிப்படையில சேவைக்கு வரும் பணியாளர்களைத் தவிர்ந்த அதிகார சபையின் கீழ் கடமை புரியும் ஏனைய பணியாளர் குழாமுக்கு தாபனக் கோவை ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

(3) பணியாளர்களின் செயற் திறமையை விருத்தி செய்வதற்கு அவசியமான பணியாளர் அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்தல்.

(4) சேமலாப நிதித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(5) நலன்புரி வசதித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

22 (1) மேற்படி 21 (1) இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப பணியாளர்களை புதிதாக வேலைக்கு சேர்த்துக் கொள்வதற்கு

தற்காலிக புதிய நியமனம் அல்லது விடுவிப்பு முறை இரண்டாம் நியமன அடிப்படை அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்து வதற்குரிய அதிகாரம்

(2) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையின் உள்ள உத்தியோகத்தர்கள் அல்லது பணியாளர்கள் ஒருவர் உரிய அதிகாரிகளின் உடன்பாட்டுடன் இரண்டாம் நியமன அடிப்படையில் அல்லது பிற அடிப்படையில் தமது சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கு அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு.

(3) 1992 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதாவது ஓர் ஒப்பந்த அடிப்படையில் போக்குவரத்து அதிகார சபை நடைமுறைக்கு வரும் திகதிக்கு திருப்திகரமான தொடர்சேவையை நிறைவேற்றும் பணியாளர்கள் போக்குவரத்து அதிகார சபையை தாபிக்கும் சந்தர்ப்பத்தில் அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் ஆட்சேர்ப்பு விதிமுறைகளில் வேண்டப்படும் நிறைவு செய்யும் அவர்கள் மேலும், ஆகக் குறைந்த கல்வித் தகைமைகளை நிறைவு செய்யும் அவர்கள் அதிகார சபையின் ஏதாவதொரு பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படலாம், மேலும், ஆகக் குறைந்த கல்வித் தகைமை கூட கொண்டிராத பணியாளர் தொடர்பாக அமைச்சர் அவர்களின் ஒப்புமையுடன் முதலாவது முறையாக ஆட்சேர்ப்பு விடயமாக வேண்டப்படும் அவர்களின் கல்வித் தகைமைகளில் குறிப்பிட்டளவு தளர்வு ஏற்படுத்தலாம்.

தற்காலிக விடுவிப் பின்படி இரண்டாம் நியமன அடிப்படையில் உள்ள பணியாளர்கள்.

(4) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பணியாளர்கள ஒருவர் அதிகார சபையின் பணியாளர் குழாமுக்கு இரண்டாம் நியமனம அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும் போது,

நிரந்தர ஓய்வூதியச் சம்பள உரித்துடைய சேவையில் ஈடுபட் டுள்ளவர்கள்.

(அ) அவர் அதிகார சபையின் பணியாளர் தொகுதிக்கு நியமனம் பெற்றபோது, அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிப்பின், அந்த பதவி ஓய்வூதிய சம்பள விதிக்கோவையின் கீழ் ஓய்வூதியச் சம்பளம் உரித்துடைய பதவியாக பிரகடனப்பட்டிருப்பின், அவர் அதிகார சபையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அக்கால வரையறைக்குள் அரசாங்க கொள்கை அடிப்படையில் சம்பளமற்ற லீவு வழங்குவதன் பிரகாரம் அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை கடமைக்கு சமூகமளிக்கப்பதில்லை என கவனத்திற் கொள்ளல் வேண்டும், என்பதுடன், அதன்படி ஓய்வூதிய சம்பள விதிக்கோவையில் 10(1) ஆம் பிரிவு அவருக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும். மேலும், அவர் அதிகார சபை சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நிறைவு வாதம் தொடர்பாகவும், அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை நிரந்தர பதவியில் அவருக்கு கொடுபட வேண்டிய சம்பளத்தில் நூற்றுக்கு இருபத்து ஐந்து வீதத்திலும் மேற்படாத தொகையை அதிகார சபையின் நிதியத்திலிருந்து சந்தர்ப்பத்திற்கேற்ப திரட்டு நிதியத்திற்கு வரவு வைப்பதற்காக திறைசேரிக்கு அல்லது மாகாண சபை நிதியத்திற்கு அதிகார சபையினால் செலுத்தப்படல் வேண்டும்.

அரசாங்க சேவை சேமலாப நிதிய அடிப் படையில் சேவையில் உள்ளவர ்கள்.

(ஆ) அவர் அதிகார சபையின் பணியாற் தொகுதிக்கு நியமனம் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை சேமலாப நிதியத்துக்கு உதவுத்தொகை செலுத்துபவராக இருப்பின்; அதிகார சபைக்கு அவர் செய்யும் சேவையை அரசாங்கம் அல்லது மாகாண சபைக்கு செய்யும் சேவையாக கருதப்படல் வேண்டும், என்பதுடன் அரசாங்க சேவை சேமலாப நிதியத்துக்கு செலுத்த வேண்டிய உதவித் தொகையை அவர் அதிகார சபையின் கீழ் சேவையில் இருக்கும் காலத்தில் இறையறாது தொடர்ந்து செலுத்தி வருதல் வேண்டும் மேலும் அவருக்காக அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அரசாங்க அல்லது மாகாண சபையினால் செலுத்தப்பட வேண்டிய உதவுத்தொகைக்கு சமமான பணத்தொகையொன்றை அரசாங்க சேவை சேமலாப நிதியத்தில் வைப்பிலிடுவதற்கு அதிகார சபையினால் அதன் நிதியங்களின் மூலம் அவர் சார்பாக செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரசபைக்கு நிரந்தர அடிப் படை யில் நியமனங் களைச் செய்தல்.

(5) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ஊழியர் அதிகார சபையின் பணியாற்தொகுதிக்கு நிரந்தர அடிப்படையில் நியமனம் ஷ செய்கையில் ;

(அ) அவர் அரசாங்க சேவையிலிருந்து அல்லது மாகாண அரசாங்க சேவையில் இருந்து நீங்கியவராகக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) அவர் அதிகார சபையின் பணியாற் தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அவரின் குறித்த பதவி நிரந்தர மற்றும் ஓய்வூதிய சம்பள உரித்துடைய பதவியாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு பதவியாயிருப்பினும் அவர் அதிகார சபையின் பணியாற்தொகுதிக்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து அவர் அரசாங்க சேவையிலிருந்தோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலிருந்தோ ஓய்வு பெறச் செய்யப்பட்டவராக கருதி, ஓய்வூதிய சம்பள விதிக்கோவையின் நியதிகளின்படி, அவருக்கு செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதிய மானியத் தொகையை அவர் பெறுவதற்கு தகுதி பெற்றவராக கணிக்கப்படுதல் வேண்டும்.

நிரந்தர மற்றும் ஓய்வூதிய சம்பள உரித்துடைய சேவையில் உள்ளவர்கள்.

(இ) அவர் வயது காரணமாக அல்லது சுகாதார காரணங்களுக்காக ஓய்வு பெற்றதன் காரணமாகவோ அல்லது அதிகார சபையில் அவர் வகித்த பதவியை இல்லாதொழித்ததன் காரணமாகவோ அல்லது ஏதாவது பிற காரணமாகவோ அவரின் சேவை முடிவுறுத்தப்பட்டாலேயொழிய, ஓய்வூதியச் சம்பள விதிக்கோவையின் நியதிகளின்படி, செலுத்தப்படக்கூடியதான அத்தகைய ஏதாவது மானியத்தொகை அவருக்கு செலுத்தப்படலாகாது.

(உ) அவரின் மரணம் அதிகார சபையின் சேவையில் இருக்கையில் நிகழ்ந்தாலே அதிகார சபையின் பணியாளர் தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன் ஆகக் கிட்டிய வேலையில் நிகழ்ந்திருந்தாலோ ஓய்வூதிய சம்பள விதிக்கோவையில் கீழ் அவருக்கு செலுத்த முடியுமான ஏதாவது மானியமும், அதிகார சபையில் அவர் செய்த சேவைக்காக செலுத்த முடியுமான ஏதும் மானியமும் அவருக்கு செலுத்தப்படலாம்.

அதிகார சபையின்சேவையில் இருக்கையில் மரணித்தல்.

(ஊ) அதிகார சபையின் பணியாளர் தொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கும்போது அவர் அரச சேவை நிதிய கட்டளைச் சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவராக இருந்திருப்பின் அவர் சேவையிலிருந்து விலக்கப்பட்டாலொழிய, அரசாங்க அல்லது மாகாண சபையின் விருப்பத்தின் பேரில் உடன்படிக்கை முடிவு பெற்றதன் காரணமாக அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையை கைவிட்டார் என அத்தகைய கட்டளைச் சட்டத்தின் விடயங்களுக்காக அவர் கருதப்படல் வேண்டும்.

அரசாங்க சேவை சேமலாப நிதி அடிப்படையில் சேவையில் உள்ள பணியாளர் கள்.

(6) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அரசாங்கம் அல்லது மாகாண சபைக்கு சேவை செய்வதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் அல்லது மாகாண சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ஆள் ஒருவர் அதிகார சபையின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வாள் மூலம் அதிகார சபையில் சேவை செய்த குறித்த சேவைக்காலம் அத்தகைய ஒப்பந்தத்தின் படி ஒப்புக்கொண்ட கடமைகளை நிறைவேற்றும் சேவை எனக் கருதப்படுதல் வேண்டும்.

கட்டாயச் சேவை.

23. அதிகாரச் சபையின் அனைத்து அதிகாரிகளும், பணியாளர்களும், குற்ற நீதிக் கோவையின் பொருற் கோடலுக்கு ஏற்ப அதன் விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவையாளர்களாக கணிக்கப்படுதல் வேண்டும்.

அதிகார சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை அரசாங்க சேவையாளர்களாக் கணித்தல்.

24. இலஞ்ச சட்டத்தின் பொருள் கோடலுக்கு ஏற்ப பட்டியல் இடப்பட்ட ஒரு நிறுவனமாக அதிகார சபை கருதப்படல் வேண்டும் என்பதுடன், அந்த சட்டத்தின் ஏற்பாடுகள் மேற்படி பொருட்படவும் வேண்டும்.

இலஞ்ச சட்டத்தின் நோக்கங்களுக்கா அதிகார சபை பட்டியலிடப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

25. (அ) அதிகார சபையினால் 22 ஆம் பிரிவின் பிரகாரம் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் வரையில், பயணிகள் போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சிற்கு உள்ளீர்க்கப்பட்ட மாகாண போக்குவரத்துப் பணிப்பாளர் மற்றும் உதவி போக்குவரத்துப் பணிப்பாளர் முறையே, அதிகார சபையின் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளராதல் வேண்டும்.

7(ஆ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம் கையளிக்கப்படும் பொது முகாமையாளர் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர் அதிகார சபையின் பிர தான நிறை வேற்று உத்தியோகத்தர் ஒருவராவர்.

26. அதிகார சபையின் பொதுக் கொள்கை அடிப்படையிலான ஆணைகளுக்கு கட்டுப்பட்டு, அதிகார சபையின் அன்றாட கடமைகளை நெறிப்படுத்துதல், அதிகார சபை சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பான சாதாரண ஒழுக்க கட்டுப்பாடு உட்பட நிருவாக விடயங்கள், அதிகார சபையின் நிதி நிருவாக விடயங்களில் சாதாரண கண்காணிப்பு, போன்றவற்றின் பொறுப்பு பொது முகாமையாளர் பால் பாரிக்கப்படுகின்றது.

பொது முகாமை யாளரின் பொது பொறுப்புக்கள்.

27. இந்த நியதிச் சட்டத்தினால் அதிகாரச் சபைக்கு கையளிக்கப்படும் ஏதாவது தத்துவங்கள், கருமங்கள் என்பனவற்றுக்கிடையே (ஒழுங்கு விதிகளை இயற்றும் தத்துவங்களைத் தவிர்த்து) செயற் திறமைமிக்க நிருவாகத்துக்கு தேவை என அதிகார சபை, கருதும் ஏதாவது தத்துவங்கள், கருமங்கள் அதிகார சபையினால் பொது முகாமையாளருக்கும் உதவிப் பொது முகாமையாளருக்கும் கையளிக்கப்படலாம், பொது முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர் அத்தகைய தத்துவங்களை கருமங்களை அதிகார சபையின் வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். அத்துடன் அத்தகைய வழிகாட்டல்கள் மற்றும் கண்காணிப்பு அதிகார சபை சார்பாக அதன் தவிசாளராலோ அல்லது 7(ஆ) உப பிரிவின்படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோக வலுவுடைய அங்கத்தவர் ஒருவரினாலோ பெற்றுக் கொடுக்கப்படலாம், அதிகார சபையினால் பொது முகாமையாளருக்கும் உதவிப் பொது முகாமையாளருக்கும் கையளித்துள்ள ஏதாவது ஓர் பாரிப்பு ஏதாவது செல்லுபடியாகும் தன்மையைக் காரணமாகக் கொண்டு இல்லாதொழிக்கப்படலாம்

பொது முகாமை யாளருக்கான பாரிப்புகள்.

பொது முகாமையாள ரினால் செய்யப்படும் பகிர்வுகள்.

28. பொது முகாமையாளர் பாலுள்ள தத்துவங்கள், கருமங்களில் சிலவற்றை அவரின் கருத்துப்படி தேவைக்கு ஏற்ப தவிசாளரின் ஒப்புமையுடன் அதிகார சபையின் உதவிப் பொது முகாமையாளருக்கும் .அதிகார சபையில் சேவையில் உள்ள வேறோர் தகுதிவாய்ந்த உத்தியோகத்தருக்கும் எழுத்து மூலம் கையளிக்கப்பட முடியுமாயிருத்தல் வேண்டும் என்பதுடன், உதவிப் பொது முகாமையாளரும் அத்தகைய உத்தியோகத்தரும் மேற்படி தத்துவங்கள், கருமங்களை பொதுமுகாமையாளரின் கண்காணிப்பின் கீழும் ஆணைப்பிரகாரமும் செயற்படுத்தல் வேண்டும். பொது முகாமையாளரினால் தவிசாளரின் ஒப்புமையுடன் மேற்படி கையளிப்பை ஏதாவதோர் செல்லுபடியாகும் தன்மையைக் காரணமாகக் கொண்டு இல்லாதொழிக்கப்படலாம்.

அதிகார சபைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தலும் செல்வாக்குகளைப் பிரயோகித்தலும்.

29. அதிகார சபையினால் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றை நிறைவேற்றுகையில் விரோதமாக தடைகளை ஏற்படுத்துதல், சம்பந்தப்படல், எதிர்த்தல் அல்லது செல்வாக்கைப் பிரயோகித்தல். இல்லாவிடின் மேற்படி செயல்களைச் செய்வதற்கு முயற்சி எடுத்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் எந்தோர் ஆளும் இந்த நியதிச் சட்டப்படி குற்றமொன்று புரிந்ததற்கான குற்றவாளியாவார். அத்துடன் அவர் நீதிவான் ஒருவர் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க விசாரணையொன்றின் பின் குற்றவாளியாகும் பட்சத்தில் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டம் ஒன்றிற்கு அல்லது இரண்டு வருடத்திற்கு மேற்படாத மறியற் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## பகுதி III

### *நிதி*

அதிகார சபையின் நிதியத்திற்கான வரவுகள்.

30. அதிகார சபைக்கே உரித்தான நிதியம் ஒன்று இருத்தல் வேண்டும்.

31. பின்வரும் பணங்கள் அதிகார சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

(i) அதிகார சபையினால் தமது தத்துவங்களை நடைமுறைப்படுத்துதல், விடயங்கள் மற்றும் கருமங்களை நிறைவேற்றுதல் மூலம் கிடைக்கப்பெறும், திரட்டப்படும் அல்லது அறவிடப்படும் அனைத்து பணத்தொகைகளும்

(ii) மத்திய மாகாண சபையினால் ஒதுக்கித்தரப்படும் அனைத்துப் பணங்களும்

(iii) எத்தகையதோர் நிதி மூலங்களிலிருந்தும் அதிகார சபைக்குக் கட்டணங்கள், உதவிகள், அர்ப்பணங்கள், மானியங்கள் மற்றும் கடன் வகையில் கிடைக்கப்பெறும் எல்லாப் பணத்தொகைகளும்,

செலவுகள் கொடுப்பன வுகள் பற்றிய பொது வான கண் காணிப்பு.

32. அதிகார சபை நிதியத்திற்குக் கிடைக்கப்பெறும் வருமானங்கள், அதன் மூலம் செய்யப்படும் கொடுப்பனவுகள் பற்றிய பொதுவான கண்காணிப்புப் பொறுப்பு பொது முகாமையாளரின் பால் பாரிக்கப்படுகின்றது.

அதிகார சபையினால நிதியம் பயன் படுத்தப்படல்.

33. அதிகார சபையின் கடமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான செலவுகள் அதிகார சபையின் அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பணிக்கொடைகள், கொடுப்பனவுகள், ஏனைய எல்லா வகையான கொடுப்பனவுகள் சம்பந்தமாகவும் இந்த நியதிச் சட்டத்தினால் அல்லது பிற எழுத்து மூல சட்டத்தின் கீழ் அதிகார சபையின் தத்துவங்களை நடைமுறைப்படுத்துதல், கருமங்களை நிறைவேற்றுதல், தொடர்பாகவும் பயணிகள் போக்குவரத்துச் சேவையை ஒழுங்குபடுத்துதல், நடைமுறைப்படுத்துல் ஆகிய கடமைகளுடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் வசுவண்டி நிறுத்தும் நிலையங்கள், பயணிகள் பாதுகாப்பு ஆவரணங்கள் நிர்மாணித்தல், அபிவிருத்தி செய்தல், பேணிப் பாதுகாத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சரவையினால் காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கும் பிற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அதிகார சபையின் நிதியத்தை அதிகார சபையினால் பயன்படுத்த முடியுமாயிருத்தல் வேண்டும்.

அதிகார சபை யினால் கடன் பெறல்.

34. அதிகார சபையின் உறுதியான நோக்கங்களுக்கு மாகாண அமைச்சரவையின் முன் அங்கீகாரத்துடன் நிதி வகையில் கடன் பெறுவதற்குரிய அதிகாரம் அதிகார சபைக்கு உண்டு. மேலும் கடன் தொகையின் அளவு, கடன் நிறைவு செய்வதற்கான கால வரையறை, கடன் கட்டுப்பாட்டு நிபந்தனைகள், கடன் பெறுதவற்கு எதிர்பார்க்கும் நிறுவனம் என்பன மாகாண சபை அமைச்சரவை எடுக்கும் தீர்மானத்தை ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

நிதி ஆண்டு.

35. அதிகார சபையின் நிதி ஆண்டு பஞ்சாங்க வருடமாயிருத்தல் வேண்டும்.

அதிகார சபையின் கணக்குகளை கணக்காய்வு செய்தல்.

36. அதிகார சபையின் வருமானம் செலவுகள், சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் நிதி தொடர்பான எல்லா கொடுக்கல் வாங்கல்கள் அதனுடன் சம்பந்தப்பட்ட கணக்கு விதிமுறைகள் ஆகியன தொடர்பாக காலத்திற்கு காலம் மத்திய மாகாணத்தின் மாகாண கணக்காய்வு திணைக்களத்தினால் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

உள்ளக ஏற்பாடுகள்

37. (1) அமைச்சரினால் பிற ஏற்பாடுகள் விதிக்கப்படும் வரையிலோ அல்லது மேலும் அவசியமான திருத்தங்கள் செய்யும் வரையிலோ 1993, மே மாதம் 28 ஆந் திகதியிட்ட 769 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதான 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச் சட்டம். இந்த நியதிச் சட்டத்தின் இடையறா ஓர் பிரிவாக அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், அத்தகைய 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நியதிச் சட்டம் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டது எனக் கருதப்படல் வேண்டும். 1992 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க வீதிப் போக்கு வரத்து சேவை நியதிச் சட்டம் தினத்தப்பட்டவாப அதிகார வமப் பெறுதல் வேண்டும் என்பது

(2) (அ) 2 (3) ஆம் உப பிரிவின் "அமைச்சரின்" எனும் சொல்லைத் தொடர்ந்து "மற்றும் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் அதிகார சபையின்" எனும் சொற்களைச் சேர்ப்பதன் முலம்.

2 (ஆ) 17 (1) ஆம் உப பிரிவின் "அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எனும் சொற்களுக்கு பதிலாக" "மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தவிசாளருக்கு" எனும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம்.

2 (இ) 17 (2) ஆம் இலக்க உப பிரிவின் "அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால்" எனும் சொற்களுக்கு பதிலாக "மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தவிசாளரினால் எனும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம்.

2. (ஈ) 17 (3) ஆம் உப பிரிவின் "செயலாளரினால்" எனும் சொல்லுக்குப் பதிலாக "மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தவிசாளருக்கு" எனும் சொற்களை பதிலீடு செய்தவன் மூலம்.

2 (உ) 17 (6) ஆம் உப பிரிவில் "மாகாண சபை அமைச்சரின் செயலாளருக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தவிசாளருக்கு" எனும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம்.

2 (ஊ) 24 (1). 24(2) ஆகிய இரு உப பிரிவிலும் "அமைச்சரினால்" எனும் சொல்லுக்குப் பதிலாக "அமைச்சின் அங்கீகாரத்துடன் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால்" எனும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம்.

2 (எ) 24 (2) (xiii) ஆம் உப பிரிவில் "தமக்கு" எனும் சொல்லுக்குப் பதிலாக" மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு" எனும் சொற்களை பதிலீடு செய்வதன் மூலம்.

38. இந்த நியதிச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் பொது முகாமையாளர், எதிர்காலத்தில் பிற கட்டளையொன்று பிறப்பிக்கப்படும் வரையில், முன்பு கூறிய 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய மாகாணத்தில் "மாகாண போக்குவரத்து பணிப்பாளர்" ஆவார். பொது முகாமை யாளரும் மாகாண போக்குவரத்து பணிப்பாளரும்.

39. அதிகார சபை நடைமுறைக்குவரும் திகதியில் மத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் போக்குவரத்து பிரிவில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அவரவர்களின் ஒப்புமையுடன் மேற்கூறிய திகதியில் இருந்து அதிகார சபையின் உத்தியோத்தர்கள், ஊழியர்களாக கருதப்படல் முடியும். அவர்களை மாகாண அரசாங்க சேவையில் இருந்த தற்காலிகமாக விடுவிக்கப்பட்டதன் பேரில் அதிகார சபையின் சேவைக்காக அன்றைய தினத்திலிருந்து இரண்டாம் நியமனம் பெற்றவர்களாக கருதப்படல் வேண்டும். அத்துடன் இந்த நியதிச் சட்டத்தின் 22 வது பிரிவு அவர்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். கடமையில் உள்ள உத்தி யோகத்தர்கள் தற்காலிகமாக விடு விக்கப்பட்டவர்களாக கருதப்படல் வேண்டும்.

40. பயணிகள் போக்குவரத்து விடயப்பொறுப்பு மாகாண அமைச்சினால் நிருவகிக்கப்படும் 70249 ஆம் இலக்க போக்குவரத்து முற்பணக் கணக்கு, கடன் பொறுப்புக்களை நிவர்த்தி செய்ததன் பின்பு இக் கணக்கின் நிலுவையை அதிகார சபைக்கு மாற்றப்படல் வேண்டும். அத்துடன் அது அதிகார சபையின் நிதியத்தின் ஒரு பிரிவாகவும் இருத்தல் வேண்டும். போக்குவரத்து முற்பணக் கணக்கு.

41. (1) மத்திய மாகாணத்தின் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புமையுடன் அமைச்சரினால் வேறு முறையில் ஓர் தீர்மானம் எடுக்கும் வரையில் இரண்டாவது நியமன அடிப்படையில் அதிகார சபையின் சேவைக்கு அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு உரிய ஆள்சார் சம்பள வேதனாதிகள், படிகள், பிற கொடுப்பனவுகள், என்பன வீதிப் போக்குவரத்து சேவை விடயப்பொறுப்பு மாகாண அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து வழங்கப்படல் வேண்டும். இரண்டாம் நியமனம் பெற்ற உத்தியோகத் தர்களுக்கு சம்பள மும் ஏனைய கொடுப்பனவு களையும் வழங்கல்.

(2) மத்திய மாகாணத்தின் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புமையுடன் அமைச்சரினால் வேறோர் விதமாக தீர்மானம் மேற்கொள்ளும் வரையில், மேலே (1) வது உப பிரிவில் குறிப்பிடப்பட்ட பணியாற் தொகுதியைத் தவிர்த்து சேவையிலுள்ள ஏனையோருக்கு உரிய வேதனாதிகள், படிகள் பிற கொடுப்பனவுகள் ஆகியவற்றை மேலே 42 வது பிரிவில் குறிப்பிடப்பட்ட முற்பணக் கணக்கு நிதியிலிருந்து வழங்கப்படல் வேண்டும். ஏனைய பணியாளர் களுக்கான கொடுப்பனவுகள்.

*அதிகார சபையினால் போக்குவரத்து முற்பணக் கணக்கு நிதியை பயன்படுத்தலாம் என்பது.*

42. மத்திய மாகாணத்தின் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரை கேட்டு, அமைச்சரானவர் வேறு விதமாக தீர்மானம் மேற்கொள்ளுமம் வரையில் 41வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இந்த நிதிச் சட்டத்தின் எந்தவோர் நோக்கத்திற்காகவும் அதிகார சபையினால் அத்தகைய போக்குவரத்து முற்பணக் கணக்கு நிதியை பிரயோகத்திற்கு எடுக்கலாம்.

*நியதிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் (கட்டளைகள்).*

43. அமைச்சரினால் வேறு விதமாக தீர்மானிக்கும் வரையில், 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1994 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதியிட்ட 805/13 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளைகள், மேலே 38 (1) ஆம் இலக்க பிரிவில் ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதான வலுவுடைய கட்டளைகளாக கணிக்கப்படல் வேண்டும்.

44. இந்த நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் மொழிப் பிரதிகளிடையே ஏதாவது ஒவ்வாமைகள் ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப் பிரதியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

45. பொருள்கோடல் :-

"அதிகார சபை" "மாகாண அதிகார சபை" ஆகிய சொற்களினால் "மத்திய மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்துசேவை அதிகார சபை" எனப் பொருள்படும்.

"அமைச்சர்" என்பது மத்திய மாகாண சபையில் அமைச்சரவையின் பயணிகள் போக்குவரத்து சேவை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் எனப்பொருள்படும்.

"அமைச்சரவை" என்பது மத்திய மாகாண சபையின் அமைச்சரவை எனப்பொருள்படும்.

"மாகாணம்" எனும் சொல்லால் மத்திய மாகாணம் எனப்பொருள்படும்.

"அனுமதிப் பத்திரம்" "பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம்" "பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம்" "வீதி அதிகாரப் பத்திரம்" ஆகிய பெயர்களில் ஏதாவது ஒரு பெயரில், இந்த நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது பிற எழுத்துமூல சட்டத்தின் கீழ் பல்வேறு கட்டணங்களின் அடிப்படையில் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதியில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு வசுவண்டியொன்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகாரம் வழங்கி விநியோகிக்கப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் எனப்பொருள்படும்.

"வசு வண்டி நிறுத்தும் நிலையங்கள்" எனும் சொல்லின் பொருளில், வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள பஸ் நிறுத்தும் இடங்களும் அடங்குதல் வேண்டும்.

"வர்த்தமானிப் பத்திரிகை" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகைச் எனப் பொருள்படும். "உள்ளூர் அதிகார சபைகள்" என்பது, மாநகர சபைகள், நகர சபைகள் அல்லது பிரதேச சபைகள் எனப் பொருள்படும்.

"உள்ளூர் அதிகார சபை" என்பது மாநகர சபையொன்று, நகர சபையொன்று அல்லது பிரதேச சபையொன்று எனப் பொருள்படும்.

"ஓம்னி வசு வண்டி" என்பது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் ஓமினி வசு வண்டி எனப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் கோச் வாகனம் எனப் பொருள்படுவதுடன், அதற்கு இரட்டை பாவனை வாகனமும் உள்ளடங்குதல் வேண்டும்.

"பயணி" என்பது கூலி வாகனமொன்றில் பயணஞ் செயவதாக இருப்பினும் சாரதி மற்றும் வசு வண்டியொன்றாயின் நடத்துனர் ஆகிய இருவரும் உள்ளடங்கா ஒர் ஆளை குறிக்கும்.

"உரிய" என்பது இந்த நியதிச் சட்டத்தின் கீழ் இயற்றப்படும் கட்டளைகளினால் உரித்தாக்கப்படும் எனப் பொருள்படும்.

"வெவ்வேறு கட்டணங்கள்" என்பது வசு வண்டியொன்றில் பயணி எனும் வகையில் ஏற்றிச் செல்லப்படுவதற்கு ஆள் ஒருவருக்கு உரிமையைப் பெற்றுக் கொடுக்கும், அந்த நபரினால் செலுத்தப்படும் கட்டணத்தையே குறிக்கும்.

"பயணிகள் போக்குவரத்து சேவை" என்பது பெருந்தெருக்களில் கட்டணமொன்று அறவிட்டு பயணிகளை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களையும் குறிக்கும்.

## மத்திய மாகாணத்திற்குள் அமைந்திருக்கும் பஸ் நிறுத்தகங்கள் பற்றிய விபரங்கள்

1. (அ) குட்செட் பிரதான பஸ் நிறுத்தகம்
   (ஆ) குட்செட் பஸ் நிறுத்தகம்
   தனியார் பஸ் நிறுத்கம்
2. மணிக்கூட்டு கோபுர பஸ் நிறுத்தகம்
3. டொரின்டன் பஸ் நிறுத்தகம்
4. பேராதனை பஸ் நிறுத்தகம்
5. தலாதுஓய பஸ் நிறுத்தகம்
6. தெல்தொட்ட பஸ் நிறுத்தகம்
7. ஹாரகம பஸ் நிறுத்தகம்
8. மஹகந்த பஸ் நிறுத்தகம்
9. அம்பிட்டிய பஸ் நிறுத்தகம்
10. கட்டுகஸ்தோட்டை பஸ் நிறுத்தகம்
11. பொல்கொல்லை பஸ் நிறுத்தகம்
12. பெனிதெனிய பஸ் நிறுத்தகம்
13. கலகெதர பஸ் நிறுத்தகம்
14. அங்கும்புர பஸ் நிறுத்தகம்
15. பொக்காவல பஸ் நிறுத்தகம்
16. மெனிக்ஹின்ன பஸ் நிறுத்தகம்
17. கடுகண்ணாவ பஸ் நிறுத்தகம்
18. கங்ஹத்த பஸ் நிறுத்தகம்
19. பொத்தபிட்டிய பஸ் நிறுத்தகம்
20. கெலிஓய பஸ் நிறுத்தகம்
21. வெலிகல்ல பஸ் நிறுத்தகம்
22. கம்பளை பஸ் நிறுத்தகம்
23. புஸ்ஸல்லாவை பஸ் நிறுத்தகம்
24. கினிகத்ஹேன பஸ் நிறுத்தகம்
25. நாவலபிட்டிய பஸ் நிறுத்தகம்
26. மஸ்கெலியா பஸ் நிறுத்தகம்
27. சாமிமலே பஸ் நிறுத்தகம்
28. ஹட்டன் பஸ் நிறுத்தகம்
29. தலவாகலை பஸ் நிறுத்தகம்
30. டயகம பஸ் நிறுத்தகம்
31. ஹங்குரன்கெத்த பஸ் நிறுத்தகம்
32. மாத்தளை ரஜவீதி பஸ் நிறுத்தகம்
33. மாத்தளை கொங்காவல பஸ் நிறுத்தகம்
34. மாத்தளை நுகசெவன பஸ் நிறுத்தகம்
35. ரத்தோட்டை ப ஸ் நிறுத்தகம்
36. நாஉல பஸ் நிறுத்தகம்
37. தம்புள்ள பஸ் நிறுத்தகம்
38. திகன பஸ் நிறுத்தகம்
39. கரல்லியத்த பஸ் நிறுத்தகம்
40. வத்தேகம பஸ் நிறுத்தகம்
41. பன்விலை பஸ் நிறுத்தகம்
42. நில்தண்டாஹின்ன பஸ் நிறுத்தகம்
43. வலபனை பஸ் நிறுத்தகம்
44. ராகல பஸ் நிறுத்தகம்
45. ஹசலக்க பஸ் நிறுத்தகம்
46. பூண்டுலோயா பஸ் நிறுத்தகம்
47. கொத்மலை பஸ் நிறுத்தகம்
48. ஹெட்டிபொல பஸ் நிறுத்தகம்
49. அலவதுகொடை பஸ் நிறுத்தகம்
50. நுவரெலியா பஸ் நிறுத்தகம்
51. நுவரெலியா தனியார் பஸ் நிறுத்தகம்